

# ஞானத்தின் படிநிலைகள்-தசகாரியம்

**பொ. சந்திரசேகரம்**
விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


சைவசித்தாந்தம் கூறும் தசகாரியம் அல்லது ஞானத்தின் படிநிலைபற்றிய விளக்கத்தைச் சிவப்பிரகாசம், உண்மைநெறி விளக்கம், துகளறுபோதம், பண்டார சாத் திரங்கள் மற்றும் சிவஞானபாடியத்தின் வாயிலாக அறியலாம். திருவாவடுதுறை ஆதீனப் பண்டாரசாத்திர நூல்களில் பதினான்கில் மூன்று நூல்கள் தசகாரியம் பற்றி விளக்குகின்றது. அவை அம்பல வாணதேசிகர் தசகாரியம், தட்சிணாமூர்த்தி தேசிகர் தசகாரியம், சுவாமிநாததேசிகர் தசகாரியம் என்பன.

சைவசித்தாந்த மெய்யியலில் சரியை முதலிய நாற்பாதங்களில் ஞானமே வீடுபேற்றிற்கு வாயில், ஞானம்- பாசஞானம், பசுஞானம், பதிஞானம் என மூவகைப்படும். இந்த ஞானத்தின் படிநிலைகளைச் சித்தாந்தம் வேறொரு வகையில் பத்தாகப் பகுத்துத் "தசகாரியம்" என்று குறிப்பிடும். இது "ஞானச்செய்தி" என்றும் வழங்கப்பெறும். "ஞானம்" என்பதற்கு "அறிவு" என்பது பொருள். ஆயினும் தத்துவ நூல்களில் அது "பொருளியல்பை உள்ளவாறு உணரும் உணர்வுக்கே" குறியீடாக வழங்கும். அறிதல் என்னும் அளவில் சரியை, கிரியை, யோகம் என்பனவும் ஞானமேயாயினும் சைவசித்தாந்தம் இவற்றை ஞானம் எனக் கொள்ளாது பொருளியல்பை உள்ளவாறு உணரும் உணர்வை - தத்துவ உணர்வையே "ஞானம்" எனக் கூறுதல் இக்கருத்து பற்றியே யாகும்.

*விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்*
*அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே!*

என்ற தாயுமானவர் பாடல் அடிகள் சரியை முதலியவற்றையும் "மெய்ஞ்ஞானம்" என்றது, மெய்ப்பொருளை ஒருவகையில் அறியும் பொதுமைபற்றியேயாகும் என்பது நோக்கத் தக்கது.

பிறப்பு நிலையில் உள்ள உயிர், உடம்பையும் உலகையும் பற்றிநின்று, உலகப்பொருள்களைத் தனித்தனிச் சுட்டி அறிந்துவரும் உணர்வு, பாசஞானம் எனப்படும். தன் அறிவைக் கட்டுப் படுத்தும் பாசமாகிய தத்துவ தாத்துவிகங்களால் விளங்கித் தனக்கு வேறான பொருள்களைப்பற்றி நிகழும் ஞானம் அது. தத்துவம் - உயிரின் விளக்கத் திற்கு உதவும் மாயையின் அடிப் படைக்கூறு; தாத்து விகம் - அதன் காரியம். மெய்ப் பொருளைத் தலைப்பட்டு உணர விரும்புவோன், முதற்கண் தன்னைப்பற்றி "நான் ஆர்?" என உள்நோக்கி உணர்தல் வேண்டும். அவ்வாறு உணரும்போது தன்னைப் பரு உடம்பு, நுண் உடம்பு முதலியவற்றின்



வேறாக, "இது நான் அல்லேன்", "இது நான் அல்லேன்" எனக் கழித்துச் செல்லும் ஆராய்ச்சி உணர்வு நிகழும். அவ்வாறு தத்துவங்களைத் தனக்கு வேறாகக் கண்டு கழித்து மேம்படும் உணர்வு, தத்துவக் கட்டுப்பாட்டின் நீங்கி, வியாபகமாய் விளங்கும் நிலை பசுஞானம் எனப்படும். "காதலினால் நான் பிரமம் என்னும் ஞானம் கருது பசுஞானம்" திருவருளின் உண்மையை உணர்தல் பதிஞானம் எனப்படும். தலைவனின் அருளைச் சார்தல் பற்றி விளங்கும் ஞானம் பதிஞானம். இதனை "சத்துடன் இச்சை மேவித் தரிப்பது சிவஞானந்தான்" என அம்பல வாணதேசிகர் தசகாரியம் குறிப்பிடுகின்றது. இச் சிவஞானம் ஒருவன் உணர்வில் விளங்கும்போது, முன்விளங்கிய பசுஞானம் அறியாமையாய்க் கழியும். இம்மூவகை ஞானம்பற்றிய விளக்கத்தை சிவஞானபோதம் ஒன்பதாம் சூத்திரத்தில் கண்டு தெளியலாம்.

இவ்வாறு வரும் மூவகை ஞானநிலை களிலும் ஆன்மா மெய்யுணர்வு எய்துதற்கண் நிகழும் உணர்வு மாற்றங்களைப் பத்து வகையில் வைத்துக்கூறும் முறை தசகாரியம் எனப்படும். தசம் - பத்து, காரியம் - செயல், ஞானச்செய்தி. உயிர்கள் உணர்வு, பொருள்களை முன்னர்ப் பொதுவாகப் பருநிலையில் கண்டு பின் அவற்றைச் சிறப்பாக நுணுகி உணர்ந்து, அவற்றின் பொருண்மையைப் பற்றும். இதனை நூல் உணர்ந்தோர் கண்டதைக் கொண்டு காணாத திற்குச்செல்வது என்றும், படிமுறையில் அறிவு நுணுகி வருதல் என்றும் குறிப்பர். இது பொதுவில் நின்றும் சிறப்பிற்குப் போதல் எனக் குறிப்பிடலாம். தூலாருந்ததி நியாய முறையிலே இதனை விளக்கலாம். அதாவது வானத்தில் உள்ள மீன்களில் அருந்ததி மீன் மிகச் சிறியது அதனை ஒருவனுக்குப் புலப்படுத்த வேண்டின் அதற்குப் பக்கத்தில் உள்ள பெரிய மீனைக் காட்டிப் புலப் படுத்துவதுபோன்றது. மேலேகூறிய முறையில் பாசஞானம் நீங்கிப் பசுஞானம் விளங்கப் பெறு தலையும், பின்னர் அதுவும் நீங்கிச் சிவஞானம் விளங்கப் பெறுதலையும் பத்து வகையில் வைத்து விளங்க உணர்த்தும் முறை தசகாரியம் எனப் படும். தசகாரியம் என்பதனை நாம் இவ்வாறு வரைவுக்கு உட்படுத்தலாம். தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயம் சார்ந்து, சரியையாதிகளில் முறையே நின்று சிவனருள் விளக்கம் குருமூர்த்தியின் திருவருள் நோக்கால் வாய்க்கப்பெற்றுப் பரிபாகமுற்ற ஆன்மா, தன்னின் வேறாக உலகத்தைக் காண்டலும், தன்னைத் தானாகக் காண்டலும் சிவமாகக் காண்டலும் அழுந்தி அனுபவித்தலும் ஆகிய மூன்றுவகை நிலைகளைப் பத்து அவத்தைகளாக நுகரும் அனுபவத்தை அறிவிப்பதாம்.

சைவசித்தாந்தம் கூறும் முறையில் பொருளியல்புகளை உணர்வதே உண்மை ஞானமாகும். அது பொருளின் எண்ணிக்கை வகையால் மூன்று என்றும், இந்த ஞானமே கேட்டல் முதலிய நான்காகுமிடத்துப் பத்தாகி விரியும். இவை: தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், "சிவ போகம்" என்பனவாகும். துகளறு போதம் முதலிய சில நூல்களில் இவை முப்பது என்று இன்னும் விரிவாக விளக்கப் பெறுகின்றன. தசகாரியத்துள் "ரூபம்" மூன்றும் சிந்தித்தலில் அடங்கும். தத்துவசுத்தி, ஆன்மசுத்தி, சிவயோகம் என்னும் மூன்றும் தெளிதலில் அடங்கும்; சிவபோகம் நிட்டையில் அடங்கும்.

*ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்*
*தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு*
*அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே.*

என்பது சிவஞான போத 8ம் சூத்திரம். இதில் "விட்டு" என்றும் "செல்லும்" என்றும் மெய்கண்டார் கூறும் இரு செயல்களே "தசகாரியம்" எனப்படுகின்றன. இவற்றுள் "விடுதல்" பாசக் கூட்டத்தையும் பசு போதத்தையும் ஆகும். "செல்லுதல்" சிவத்தினிடத்திலாகும். உப தேசத்தைப் பெற்றோர் அனைவர்க்கும் விடுதலும் செல்லுதலும் ஒரு வகையாகவே நிகழ்தல் இல்லை; அவரவரது தன்மைக் கேற்ப மெல்லவும் விரையவும் நிகழும்.

தத்துவம், ஆன்மா, சிவம் என்ற மூன்று பொருள்களும் பாசம், பசு, பதி எனப்படும். ஆணவம், கன்மம், மாயை என்ற மூவகைப் பாசங்களுள் மாயையின் காரியமாகிய தத்துவம் ஒன்றே கூறப்பெறுகின்றது. மூவகைப் பாசங்களில் மாயையை மட்டிலும் கூறியதற்குக் காரணம் ஏனைய எல்லாவற்றையும் விடப் பருப் பொருளாய் நின்று உயிரை மயக்கித் தனக்கு வேறாய் உள்ளபொருளை நோக்காது தன்னையே நோக்கும், தனக்குமேல் வேறொரு பொருள் இல்லையென்று எண்ணும் எண்ணத்திற்கும் காரணமாய் நிற்கும். ஆகவே, முப்பொருளின் இயல்பை உள்ளவாறு உணரும் நிலை வேறுபாடே இங்கு "தசகாரியம்" எனப்படுகின்றது.

இனி தத்துவங்களைப்பற்றியும் ஆன்மாவைப் பற்றியும் கூறுமிடத்தில் "ரூபம், தரிசனம், சுத்தி" என்று சுட்டப்பெறும். இவற்றுள் "ரூபம்" என்பது பொதுவாய் (நிருவிகற்பமாய்) அறிதல் என்றும், "தரிசனம்" என்பது ஐயமாக அறிதல் என்றும், "சுத்தி" என்பது தெளிவாக அறிதல் என்றும் சிவஞானமுனிவர் தமது பாடியத்தில் குறிப்பிடுகின்றார்.


ஆன்மா ஐம்பொறி, மனம் முதலிய தத்துவங்களோடு கூடி அவற்றின் செயலே தன் செயலாகக் கண்டுவரும் உணர்வு நிலையே பாசஞானநிலை எனப்பட்டது. அதை நீக்கிக் கொள்ளுதற்கு முதற்கண் தத்துவங்களின் இயல்பைச் சுட்டி உணர்தல் வேண்டும். பின்னர் அவற்றின் நீங்குதற்கு அத்தத்துவங்களால் நமக்கு விளங்கும் அறிவிச்சை செயல்களின் விருத்திகளை இன்ன, இன்ன என முன்னர் உணர்தல் வேண்டும். அங்ஙனம் உணர்தல் தத்துவ ரூபம் எனப்படும். பின் அவை தாமே அறிவனவல்ல; கண்ணுக்கு முகத்தைக் காட்டும் கண்ணாடிபோல, உயிர்க்குப் பொருள்களைக் காட்டும் அறிவில் பொருள்களே அவை என்று உணர்தல் வேண்டும். அவ்வாறு உணர்தல் தத்துவ தரிசனம் எனப்படும். அதன் பின்னே நமக்கு அன்றாடம் நிகழும் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், தன்வசம் அழிதல் நிலைகளில் வைத்து, அத்தத்துவங்கள் ஆன்மாவினின்றும் நீங்குவனவாயிருத்தலையும் சுட்டி உணர்தல் வேண்டும். இது தத்துவசுத்தி எனப்படும். இதனை

***மண்முதற் சிவமதீறாய் வடிவு காண்பதுவே ரூபம்***
***மண்முதற் சிவமதீறாய் மலஞ்சடம் என்றல் காட்சி***
***மண்முதற் சிவமதீறாய் வகை அதில் தான் நிலாது***
***கண்ணுதல் அருளால் நீங்கல் சுத்தியாய்க் கருதலாமே***

(உண்மை நெறி விளக்கம், 1)

***தத்துவம் அனைத்தும் நோக்கித் தனித்தனிச்***
***செயல்கள் காண்ட***
***ஒத்ததன் உருவமாகும் ஒன்றையொன்று உணராது***
***இது***
***சத்தியமஞ் சடமே எனத் தான் அறிந்திடுதல் காட்சி***
***நித்தியம் அன்று சில நாள் நீங்குதல் என்றல் சுத்தி***

(அம்பலவவாணதேசிகர் தசகாரியம்) எனவும் குறிப்பிடுதல் காணலாம்.



தத்துவங்களின் இயல்பை நூல்களில் அறிந்து கொள்வதுபோல் "தத்துவங்களோ அல்லது அவற்றின் கூட்டமோ ஆன்மா அல்ல; ஆன்மா வேறு" என்பதையும் அதன் இயல்புகளையும் நூல்களில் கூறியவாறு அறிந்து கொள்ளுதலே ஆன்மரூபம். அதாவது தத்துவ சுத்தி என்னும் பாசத்தைப் பற்றிய தெளிவுக்காட்சி

எய்திய ஆன்மா, அக்காட்சி பற்றிப் பாசத்தின் நீங்கித் தன் வியாபக நிலையைத் தலைப்பட்டுத் தானே முதல் என நிற்கும். இங்ஙனம் தன்னை உணர்தலே ஆன்மாவின் இயல்பைப் பொதுப் படக்காண்டல். ஆதலால் உட்காட்சி ஆன்ம ரூபம் எனப்படும். அதன்பின் அவற்றைத் தன் அறிவிற்குப் பொருந்துமாறு ஆராய்தலே ஆன்மதரிசனம் ஆகும்.

இவ்வாறு ஆராய்ந்தபொழுது ஆன்மா தத்துவங்கள் போல சடமாகாது சித்தே என் றாலும், பிறிதொன்றன் துணையின்றித் தனித்து நின்று அறிய இயலாது. ஆதலின் அதற்கு எப் பொழுதும் துணையாய் உடன்நின்று உணர்த்தி வருவது முதல்வன் திருவருளே என்பது இனிது விளங்கும். ஆதலின் அவ்விளக்கத்தின் வழித் தனக்கென ஒரு செயலுமின்றி, எல்லாம் முதல்வன் செயலாக உணர்ந்து தன்செயலற்று இருத்தல் ஆன்மசுத்தி ஆகும்.

*தேசுற மருவும் ஆன்ம தரிசனமும் ஆன்ம சுத்தி*
*ஆசு இலா ஆன்மலாபம் ஆக மூன்றாகு மூன்றும்*
*பாசமது அகல ஞானம் பற்றல் தான் பணியை நீத்தல்*
*ஏசில் நேயத்தழுந்துதல் எனும் இவற்றுள்*
*- அடங்குமன்றே.*
*(சிவப்பிரகாசம், 71)*

| | |
|---|---|
| ஆன்மதரிசனம் - | பாசமானது நீங்க ஞானத்தைத் தரிசித்தல் |
| ஆன்மசுத்தி - | தன்செயலை விடுதல் |
| ஆன்மலாபம் - | நேயத்தழுந்துதல் |

தன்செயலைவிடுதல் அல்லது தான்பணி நீத்தலாவது ஆன்மாவின் இச்சா, ஞானக், கிரியை களின் தொழிற்பாடின்றி, நிகழ்வனவெல்லாம் சிவபெருமானது இச்சா ஞானக் கிரியைகளின் நிகழ்ச்சியே எனக்கண்டு திருவருள் வியாபகத் துள்ளாக ஆன்மா அடங்கி நிற்றலாம்.

கலாதி தத்துவங்களால் வரும் ஏகதேச அறிவின் இயல்பை உணர்ந்து, அவ்வேகதேச அறிவுக்குக் காரணமான மலங்கள் நீங்கப்பெற்ற அருள்நிலையில், அம்மலங்களின் வாசனை தாக் காதபடி அவ்வருள் வியாபகத்துள்ளாக ஆன்மா அடங்கிச் சிவத்தோடு ஏகநாகிநிற்பின் அதன் வியாபக அறிவு விளங்கத்தோன்றும்.

நேயத்தழுந்துதல் அல்லது ஏகனாகி நிற்றலாவது ஆன்மா தானென வேறுகாணப்படு மின்றிச் சிவனோடு ஒன்று பட்டு நிற்றல். இதுவே ஆன்மலாபமாகும். அதாவது ஆன்மா கலாதி தத்துவங்களால் வரும் ஏகதேச அறிவின் இயல்பை உணர்ந்து அவ் ஏகதேச அறிவிற்குக் காரணமாகிய மலங்கள் நீங்கப் பெற்ற அருள் நிலையில் அம்மலங்கள் தாக்காதபடி அவ்வருள் வியாபகத்துக்குள் ஆன்மாவடங்கி சிவத்தோடு ஏகனாக நிற்பின் அதன் வியாபக அறிவு விளங்கத் தோன்றும்.

*இந்நிலை தன்னின் மன்னி எய்திடுங் கலாதி*
*போதந்*
*தன்னளவு அறிந்து நிற்குந் தகவிலா மலங்கள் நீத்த*
*அந்நிலை கரணம் ஆகாவகை அதில் அறிவு அடங்கி*
*மன்னிட வியாபியாய வான்பயன் தோன்று அன்றே.*

*(சிவப்பிரகாசம் 78)*

தத்துவங்களின் இயல்பு, ஆன்மாவின் இயல்பு இவற்றை நூல்களில் கூறியவாறே கொள்ளுதல்போல் சிவத்தினது பொது இயல்பு (தடத்த இலட்சணம்), உண்மை இயல்பு (சொரூப இலட்சணம்) நூல்களில் சொல்லியவாறு அறிந்து கொள்ளுதல் சிவரூபம் ஆகும். வேறொரு வகையில் கூறினால் ஆகாயத்தின் அளப்பருந் தன்மையைக் காணும்போது, அங்கு காணப் படுவது வெறும் வெளி மட்டுமன்றி அவ்வெளி யின் அளப்பருந்தன்மையைக் காட்டிநிற்கும் ஞாயிற்றின் ஒளியும் ஆகும். அவ்வொளி பற்றியே ஆகாயத்தின் பரப்பு உணரப்படுகின்றது. அது போல, ஆன்ம வியாபகம் உணரப்பட்டது, அதற்குச் சார்பாய்யாங்கணும் நிறைந்துள்ள திரு வருள் ஒளி இருத்தல் பற்றியே எனத் திருவருளின்

உண்மையைப் பொதுவாக உணர்வதே சிவரூபம் எனப்பட்டது.

பின்னர் அவற்றைத் தன் அறிவிற்குப் பொருந்துமாறு ஆராய்தல் சிவதரிசனம். சிவதரிசனத்தால் சிவமாய்க் காணும் காட்சியும், அக் காட்சியால் சிவானந்தவிளைவும் உண்டாகும். ஆகவே, இந்நிலையே சிவத்தை உண்மையில் காணும் சிவதரிசனம் ஆதல் அறிந்து தெளியப் படும்.



பித்தாய் உள்ளத்தில் நின்ற பிரிவு இருள் அகல ஞான
வித்தாய் நிற்கும் வீரம் விட்டருள் இச்சை மேவ
வைத்தது ரூபமாகும் வரும் அருட் செயலதாக
ஒத்தது காட்சியாகும் உயர் சிவமதற்குத் தானே.

(அம்பலவாணதேசிகர் தசகாரியம், 33)

ஆணவப் படலமானது ஆன்மாவை விட்டு நீங்க ஆன்மா ஞான மயமாய் (ஞானவித்தாய்) நிற்கும், அந்த வீரத்தையும் விட்டு சிவனருளின் இச்சை மேவவைத்தலே சிவரூபம் என்பதும், எல்லாவற்றையும் திருவருளின் செயலாகக் காண்டலே சிவதரிசனம் என்பதும் தெளியப்படும்.

சிவதரிசனம் வாய்த்த பொழுதும் பழைய வாசனை பற்றி "யான் செய்தேன்; பிறர் செய்தார்; என்னுடையது; பிறருடையது" என்று எண்ணும் தற்போதம் அல்லது சிவபோதம் எழும். இதனை அச் சிவதரிசன முறையில் சிந்தித்து அடக்கித் தன் செயலற்றுச் சிவத்தில் ஒன்றி இருத்தலே சிவயோகம் ஆகும். இதுவே உண்மை யோகம். ஏனைய யோகம் பொதுயோகமே என்பது புலப்படும் . சிவம் "தானும் தனது சக்தியும்" என இரு கூறுபட்டு நிற்கும். ஆதலின் முதற்கண் சக்தியை அறிந்தே பின் சிவத்தை அறியும் நிலை உண்டாகும். இவற்றுள் சக்தியைத் தெளிவாக அறியும் நிலையே "சிவயோகம்" எனப்படும். சிவத்தைத் தெளிவாக அறியும் நிலையே "சிவபோகம்".

சிவயோகத்தில் ஆன்மா நிலைத்து நிற்கும் பொழுது சிவானந்தம் தோன்றும். ஆதலின் அதனை நுகர நுகர அது ஒரு பாலைக்கொருகால் மிகுந்து பெருகி ஆன்ம அறிவைத் தன்னுள்ளே விழுங்கிக்கொள்ளும். இந்நிலைக்குமேல், திருவருளுக்கு முதலாகிய சிவத்தை மெய்யன்பாற்றலைப் பட்டு அன்பே இன்பமாய் அமரும்நிலை சிவ போகம் எனப்படும். இதுவே பிறவியின் முடிநிலைப் பெரும்பயன் ஆதலால், இது ஆன்ம லாபம் எனப்படும். இந்நிலை இப்பிறவியில் இப்பொழுதே பெறக்கூடியது. (here and now). இது நின்மல துரியாதீத ஆனந்தநிலை எனவும் இன்புறுநிலை எனவும் கூறப்படும்.

சத்தியின் செயல்கள் எல்லாந் தற் சிவம் அதனுக்கு
இன்றாய்
ஒத்திடல் உணர்வளித்தல் உயர் சிவயோகமாகும்
பித்தது வாகிச் சற்றும் பின்னம தற்றுத் தன்னுள்
வைத்துயிர் போகமாக வளர்தல் ஆராமை தானே

(அம்பலவாணதேசிகர் தசகாரியம், 34)

சிவத்தைப்பற்றிக் கூறுமிடத்தில் "ரூபம்", "தரிசனம்" என்பனவே கூறப்பெறும் ஆயினும், தத்துவத்தைப்பற்றியும் ஆன்மாவைப் பற்றியும்

தெளிவாக அறிதலைச் "சுத்தி" என்று சொல்வது போலச் சிவத்தைத் தெளிவாக அறிதலைச் "சுத்தி" என்று சொல்வதில்லை. ஏனெனில், தத்துவத்தைப்பற்றியும் ஆன்மாவைப் பற்றியும் தெளிவாக அறிதலின் பயன் அவற்றுள் வரும் மயக்கத்தினின்றும் நீங்குதலேயாகும். ஆதலின், அவை "சுத்தி" எனப்படுகின்றன. சிவத்தைப்பற்றித் தெளிவாக அறிதலின் பயன் அதனைவிட்டு நீங்காது அதன்கண் அழுந்தி இன்புறுத லேயாதலின் அது "சுத்தி" எனப்படுதல் இல்லை.

இங்ஙனமாகக் கூறப்பெற்ற தசகாரியங்கள் மேற்கூறியவாறு முறையாகக் கூறப்பெற்றன வாயினும், அவை ஒன்று நிகழ்ந்து முடிந்த பின்னர் தான் மற்றொன்று நிகழும் என்று கூறமுடியாது. முப்பொருளும், வேறுவேறு பிரிந்து நில்லாமல், ஒன்றோடொன்று பின்னிக் கலந்து பிரிப்பின்றி உடன் நிற்பவை ஆதலால், மேலே கூறிய பத்து ஞானச் செய்திகளும் ஒன்றன்பின் ஒன்றாய் வரிசையாக நிகழாமல், அவற்றுள் சில உடன் நிகழ்வனவாம். குறிப்பாகத் தத்துவ தரிசனத்தால் தத்துவ ரூபம் நிலைபெறும். ஆன்மரூபத்தால் தத்துவ தரிசனம் நிலைபெறும்.

மேலும் சிவரூபம் ஆன்ம தரிசனத்தைப் பயத்தலால் அது அதில் அடங்கும். அவ்வாறே சிவதரிசனம் ஆன்மசுத்தியில் அடங்கும். ஆன்மசுத்தியும் சிவயோகமும் ஒருநிலையே ஆகும். பின் நிகழும் சிவயோகம் ஆன்மலாபம் எனப்படும். இவ்வாறாதலின், ஆணவத்தின் நீங்கிய நின்மல சுத்தாவத்தையை ஐந்தவத்தையென வைத்து உணரும் பொழுது தசகாரியங்களைத் (1) தத்துவரூபம், (2) த்த்துவதரிசனம், (3) தத்துவசுத்தி, (4) ஆன்ம ரூபம், (5) ஆன்ம தரிசனம், (6) ஆன்மசுத்தி, (7) ஆன்மலாபம் என ஏழு அவதாரங்களாக உணர்த்தி இவற்றுள் ஆன்ம ரூபம் வரையுள்ள நான்கும், நின்மல சாக்கிரம், எனவும், ஆன்மசுத்தி நின்மலதுரியம் எனவும், ஆன்மதரிசனம் நின்மல சொப்பனம் எனவும், ஆன்மலாபம் நின்மலதுரியாதீதம் எனவும் நான்கு அவத்தையுள் அடக்கிக் கூறுவது துறைசையாதீனஞான அநுபவமரபாக உள்ளது. இங்கு நின்மல சுழுத்தி என்றொரு அவத்தை இங்கு கூறப்படுவதில்லை. அது ஆன்மா தனக்கு எல்லாச் செயலும் உள்ளன என உணரும் அளவில் தோன்றிப் பின் மறைவது எனக் கொள்ளப் பெறுகிறது. ஆதலால், சுத்த நிலையில் நான்கு அவத்தைகளென கூறப்படுகின்றன. எனினும் திருவாவடுதுறை ஆதீனமரபில் நின்மல நிலையில் நிகழும் பல்வேறு அவத்தைகள் கூறப் பெறுகின்றது. குறிப்பாக நின்மல சுழுத்தி நிலையினை அம்பலவாணதேசிகர் அவர்கள்

***இருந்திடும் அகம் அது ஆக எழுந்திடும் நினைவடக்கித்***
***தெரிந்திடுந் தனை இழந்து திருவருள் இச்சை கூரப்***
***பொருந்திடல் அருளின் இச்சை பூண்டது சுழுத்தி ஆகும்***
***திருந்திட அதனிற் செய்தி செய்திட வேண்டும் ஏற்கே.***

(அம்பலவாண தேசிகர் தசகாரியம். 28)

நான் என்று எழுகின்ற நினைவினை அடக்கி, தான் ஒரு பொருள் என்பதையும் இழந்து திருவருளின் நோக்கமுற்று, அத் திருவருளினைக் காமிப்பதாகிய இந்நிலை சுழுத்தி அவஸ்தையாகும். தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள் தலைவன் தாளே என்கின்ற நிலையாகும். இவ்வகையான படி நிலைகளில் சாக்கிராதீதம் மிக உயர்ந்தது. மெய்கண்டார் போன்றவர்களின் நிலை சாக்கிராதீதமாகும். இந் நிலை என்பது கருவிகள் முப்பத்தாறும் பொருந்தி சகல நிலைப்படாமலும், அறியாமைக்கு உட்பட்ட கேவலப்படாமலும், தன்னிடத்தே தோன்றி நின்ற மேலான ஞானசக்தியின் அனுக்கிரகத்தால் தற்போதச்சேட்டை ஒழிந்து நிற்க அப்போது தோன்றுகின்ற சிவத்தோடு ஏகனாகி நிற்றல் சாக்கிராதீதமாம். இதனைச் சிவப்பிரகாசம்

*பொற்புறு கருவி யாவும் புணராமே அறிவிலாமைச்*
*சொற் பெறு அதீதம் வந்து தோன்றுமே தோன்றி நின்று*
*சிற்பர அதனால் உள்ளச் செயலற உதிக்குந்*
*தற்பரமாகி நிற்றல் சாக்கிராதீதந் தானே.*

*(சிவப்பிரகாசம், 80)*



எனக் குறிப்பிடுகின்றது. சிவப்பிரகாச உரையாசிரியர் திருவிளங்கம் ஆன்மரூபத்தை நின்மலசாக்கிரம் எனவும், ஆன்தரிசனத்தை நின்மல சொப்பனம் எனவும் ஆன்மசுத்தியை நின்மல சுழுத்தி எனவும் குறிப்பிடுதல் காணலாம்.

சிவஞானபோத அவையடக்கத்தில், "தம்மைஉணர்ந்து தமை உடைய தன்னுணர்வார்" என்று கூறப்பட்டது. இதனால் தம்மை உணர்ந்தன்றித் தலைவனை உணர்தல் கூடாது என்பது பெறப்படுகிறது.

சிவப்பிரகாசத்தில் 72, 78ஆம் செய்யுள்களில், "தன்னாலேதனை யறிந்தால் தன்னையும் தானே காணும்" எனவும், "அதில் அறிவடங்கி மன்னிட வியாபியாய வான் பயன் தோன்றும்" எனவும் கூறப்படுகின்றன. இவற்றின் பொருள் ஆன்மா தன்னுடைய இயற்கை அறிவினாலே எதனையும் அறியும் இயல்பு தனக்கு இல்லையாயினும், தன்னுடைய அறிவினாலே அறிந்து அனுபவிப்பவனாகக் கருதிப் போகங்களை அனுபவிக்கும், சிவஞானத்தாலே அந்த ஞானத்தை அறிந்தால் தான் கருவிகளோடு கூடி நின்று போகங்களை அறியும் முறையை உணரும் என்பதும் "இறைவனில் ஆன்மாவின் அறிவு அடங்கி நிலைபெற்றால் தான் எங்கும் நிறைந்துள்ள - வியாபகத் தன்மையாகிய உயர்ந்த பயன் ஆன்மாவிற்கு விளங்கும்" என்பதும் ஆகும். இவற்றால் சிவப்பிரகாசம் "தலைவனை உணர்ந்தன்றித் தம்மை உணர்தல்கூடாது" என்னும் கருத்தைத் தெரிவிக்கின்றது. இவற்றை நோக்கும் போது சிவப்பிரகாசம் சிவஞான போதத்தோடு மாறுபடுவதாகத் தோன்றும். அம்மாறுபாடு இல்லை என்பதைச் சிவஞானமுனிவர் தசகாரியங்களிலும் வைத்து விளக்குகிறார்.

சிவஞானபோதத்தில் கூறியது ஆன்ம சுத்தியின் பின் உளதாகும் சிவப்பேற்றைப் பற்றியது. சிவப்பிரகாசத்தில், "தன்னாலே தனையறிந்தால் தன்னையும் தானே காணும்" என்பது சிவரூபத்தால் ஆன்ம தரிசனம்கிடைக்கும் என்பதைக் குறிக்கின்றது. "அதிலறி வடங்கி மன்னிட வியாபியாயவான்பயன் தோன்றும்" என்றது சிவதரிசனத்தால் ஆன்மசுத்திகிடைக்கும் எனப்பொருள் ஒருமை காண்கின்றார்.

"அரன் தன்னாலே தன்னையும் கண்டு தமைக் காணார்" எனச் சிவஞானபோதத்தில் ஒன்பதாம் சூத்திரத்து முதல் அதிகரணத்தில் வரும் தொடர் சிவரூபத்தில் ஆன்ம தரிசனம் கிடைக்கும் என்பதையும் அவ்விடத்தே குறிக்கின்றார்.

எட்டாம் சூத்திரம் ஆன்ம தரிசனம் பற்றிக் கூறுகின்றது, ஒன்பதாம் சூத்திரம் ஆன்ம சுத்திபற்றிக் கூறுகின்றது. எனினும் சிலர் சிவப்பிரகாசம் "தான் பணியை நீத்தலே ஆன்ம சுத்தி" என்று 71வது பாட்டில் கூறுகிறது.

அக்கருத்து "ஏகனாகி இறை பணி நிற்க" எனப் பின்வரும் பத்தாம் சூத்திரத்தில் தான் உள்ளது. எனவே பத்தாம் சூத்திரம்தான் பாசநீக்கமாகிய ஆன்மசுத்தியைக் கூறுகின்றது, ஒன்பதாம் சூத்திரம் "பதியை நாடி" எனவும் "தண்நிழலாம் பதி" எனவும் சிவதரிசனம் கிடைக்கும் முறையைக் குறிக்கின்றது எனக்குறிப்பிடுவர்.

இக்கருத்தை விளக்கும் சிவஞான முனிவர் சிவதரிசனம் நிகழ்ந்து முடிந்த பின்புதான் ஆன்மசுத்தி நிகழும் அன்று ஒளிவருதலும் இருள் நீங்குதலும் ஒரேகாலத்திலே உடன் நிகழ்வது போல சிவதரிசனம் நிகழும் போதே ஆன்ம சுத்தியும் உடன் நிகழுவதாகும். அது பற்றியும் ஆன்ம சுத்தியை முற்ற முடித்துக் கூறும் அடுத்த சூத்திரத்தோடு இச்சூத்திரத்திலுள்ள வேறுபாடு சிறிதே ஆதலின் இரு சூத்திரங்களும் ஒரு பொருளையே இரு வேறுபடுத்திக் கூறுகின்றது என்கின்றார்.

தொகுத்து நோக்கும்போது இந்திய மெய்யியலில் தசகாரியம் பற்றிய விளக்கம் சைவசித்தாந்த மரபிற்கு சிறப்பாக உரியதாகும். தசகாரியம் பற்றிய அறிவைச் சாத்திர நூல்களில் மட்டுமன்றி திருவாசகம் முதலிய நூல்களிலும் காணலாம். தசகாரியத்தை ஞானத்தின் படிகள் என்று கூறும்போது ஆன்மசுத்தி, சிவதரிசனம் முதலியவை பெறுபேறாக இருந்தாலும் முடிவான பெறுபேறாக சிவபோகம் காணப்படுவதாலும் அதற்கு மேல் எவ்வகை நிலைகளும் இல்லை. ஆகையால் அதனை ஒரு படிமுறையாகக் கொள்வது இடர்பாட்டிற்குரியதாகின்றது. எனவே இதனை நவகாரியம் என அழைக்கலாம் என்பர் சிலர். முன்னர் காட்டப்பட்டது போலச் சிலர் சிவதரிசனம் முதலியவற்றை ஆன்மலாபமாகக் கூறித் தசகாரியத்தை ஏழு என்பர். எவ்வாறாயினும் ஆன்மசுத்தி உட்பட்ட யாவையும் ஆன்மலாபம் என்று வரையறுக்கலாம். இவை பற்றிய விடயங்களை ஞான மரபில் நின்ற சமயகுரவர்கள், அருணகிரிநாதர் போன்றோரின் பாடல்களுடன் ஒப்பிட்டு ஆராய்கின்றபோது மேலும்பல உண்மைகள் புலப்படும்.

## உதவிய நூல்கள்


1. **திருவாவடுதுறை ஆதீனப் பண்டாரசாத்திரம் தசகாரியங்கள்,** திருவாவடுதுறை ஆதீனம், 1959.
2. திருவிளங்கம், மு., (புத்துரை), **சிவப்பிரகாசம்,** யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், 1974.
3. ஆனந்தராயன், டாக்டர்.ஆ., **தசகாரியம்,** அருள்நந்திசிவம் அருட்பணி மன்ற வெளியீடு, திருநெல்வேலி, 1993.
4. அருணை வடிவேலு முதலியார், சி., **சிவஞானபோத மாபாடியம்** - பொருள்நிலை விளக்கம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1991.
5. வச்சிரவேல் முதலியார், க., இராதாகிருஷ்ணன், டாக்டர். எஸ். **சிவஞானபாடியத் திறவு,** சென்னைப் பல்கலைக் கழகம், 1977.